**செய்தி வெளியீடு எண்: 43/2022** **நாள்: 13.06.2022**

**பத்திரிக்கை செய்தி**

**<u>சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் புதிய மேலாண்மை இயக்குநராக முதன்மை செயலாளர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்.</u>**

கோயம்பேடு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக முதன்மை செயலாளர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.06.2022) பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் இதற்கு முன்னதாக வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆணையராக முதன்மை செயலாளராக பணியாற்றி வந்தார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் முன்னதாக பணியாற்றி வந்த மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., அவர்கள் தற்போது நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையில் முதன்மை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர்கள் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா (நிதி), திரு. டாக்டர். கே. பிரபாகர் (முதன்மை பாதுகாப்பு அதிகாரி), முதன்மை ஆலோசகர் திரு. ராஜீவ் கே. ஸ்ரீவஸ்தவா (சுற்றுசூழல்) மற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பல்வேறு துறையை சார்ந்த அலுவலர்கள் சந்தித்தார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**